பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 05 2025 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குஜராத் மாநிலத்தில் 77 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

2. நாட்டின் பாதுகாப்பில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

3. நான்கு மாநிலங்களுக்கு உட்பட்ட 5 சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

4. உடல் ஆரோக்கியத்தை பேணிப் பாதுகாக்க உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

5. ஆசிய கராத்தே சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

குஜராத் மாநிலத்தில் 77 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

இரண்டு நாள் பயணமாக குஜராத் செல்லும் அவர், இன்று காலை **Dahod** நகரில் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட 9 ஆயிரம் ஹெச்.பி. திறன் கொண்ட மின்சார ரயில் எஞ்சினின் இயக்கத்தை தொடங்கி வைக்கிறார்.

பின்னர் நடைபெறும் நிகழ்ச்சியில் 24 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் அவர், மக்களிடையே உரையாற்றுகிறார்.

இன்று மாலை 4 மணிக்கு புஜ் செல்லும் அவர், 53 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

நாளை காந்திநகரில் நடைபெறும் குஜராத் நகர்ப்புற வளர்ச்சி அமைப்பின் 20 ஆண்டுகால நிறைவு விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

<<<<>>>>

நாட்டின் பாதுகாப்பில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

ஜம்ஷெட்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்று அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்புப் படையினரின் துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு குறித்து பெருமிதம் கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களில் அனைவரும் ஒத்த கருத்துடன் செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

மக்களை மையமாகக் கொண்டே திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், விளிம்பு நிலையில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் மாநில முதலமைச்சர்கள் பங்கேற்ற மாநாட்டில் இதுகுறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

வடகிழக்குப் பகுதிக்கான முதலீட்டாளர்களின் உச்சி மாநாட்டின் மூலம் 4 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டுக்கான முன் மொழிவுகள் பெறப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வடகிழக்கு மாநிலங்களின் முன்னேற்றத்திற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார்.

விவசாயம், விளையாட்டு, முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா, பொருளாதார வழித்தடங்கள், உள்கட்டமைப்பு, ஜவுள உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 8 உயர்நிலை பணிக் குழுக்கள் அமைக்கப்பபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இப்பகுதியின் மேம்பாட்டிற்காக முதலீட்டாளர்கள், வெளிநாட்டு தொழிலதிபர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் பேச்சுவாத்த்தை நடத்தப்பட்டு வருவதாக திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சமூகநீ மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு. வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் **Chattarpur**-ல் எந்திரங்கள் மூலம் துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதற்கான தேசிய செயல்திட்டத்தை அவர் தொடங்கி வைத்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான செயல் திட்டங்களில் அனைத்து தரப்பினரும் பங்கேற்க வேண்டும் என்று திரு. வீரேந்திர குமார் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

உடல் ஆரோக்கியத்தை பேணிப் பாதுகாக்க உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற ஞாயிறுதோறும் சைக்கிள் பயிற்சி நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் இதனைத் தெரிவித்தார்.

கடுமையான பணிச்சூழல் இருந்தபோதிலும், தொடர்ந்து உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

நான்கு மாநிலங்களுக்கு உட்பட்ட 5 சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

குஜராத்தில் 2 தொகுதிகள், கேரளா, மேற்குவங்கம், பஞ்சாப் மாநிலங்களில் தலா ஒரு தொகுதிக்கு அடுத்த மாதம் 19ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

அடுத்த மாதம் 2ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாளாகும்.

3ஆம் தேதி வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்.

5ஆம் தேதி வேட்புமனுக்களை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கான கடைசி நாளாகும்.

இந்தத் தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 23ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

<<<<>>>>

இனி . . . . .

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில், சாதனை படைத்த பாதுகாப்புப் படையினரின் சிறப்பைப் போற்றும் வகையிலான செய்தித் தொகுப்பு...

**(Sound Byte – Music – 12 Sec)**

இதில் இன்று இடம்பெறுகிறது பரம்வீர் சக்ரா விருது பெற்ற லெப்டினென்ட் கர்னல் **Ardeshir Burzorji Tarapore**-ன் வீரதீர சாதனைகள்...

**(Voice Over / Closing Music – 114 Sec)**

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியைக் கொண்டாடும் வகையில் நாடு முழுவதும் பேரணிகள் நடைபெற்று வருகின்றன.

ராஜஸ்தானின் அஜ்மீரில் நடைபெற்ற பேரணியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

தமிழகத்தின் தென்காசியில் தீவிரவாதத்திற்கு எதிராக இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு பாராட்டு தெரிவித்து பிஜேபி சார்பில் தேசியக் கொடியேந்தி பேரணி நடைபெற்றது.

இதில் முன்னாள் ராணுவத்தினர், பொதுமக்கள், கட்சித் தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், கொங்கன் கோவா மற்றும் மகாராஷ்டிர மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

தில்லி, ஆந்திரப்பிரதேசம், குஜராத், ஹரியானா, சண்டிகர், ஹிமாச்சல்பிரதேஷ், ஜார்கண்ட், பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆசிய கராத்தே சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

தாஷ்கண்டில் நடைபெற்ற இப்போட்டியின் பாரா கராத்தே பிரிவில் இந்தியாவின் தருண் சர்மா தங்கப் பதக்கத்தை வென்றார்.

மகளிர் 55 கிலோ பிரிவில் அலி ஷாவும், 68 கிலோ பிரிவில் புவனேஸ்வரி ஜாதவும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

-------------

ஆஸ்திரிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Aalisha Naik** வெள்ளிப் பதக்கம் வென்றார்.

-------------

ஆசிய தற்காப்புக் கலை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

அம்மானில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 57 கிலோ எடைப் பிரிவில் **Suchika Taryal** தங்கப்பதக்கம் வென்றார்.

**<<<<The End>>>>**